TAMIL NADU LEGISLATURE LIBRARY
28 JUL 1972
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1972 மார்ச் 21.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினக்கள்.

Drinking water Schemes

* 593 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the scheme for the supply of drinking water to Tirukoilur has been taken up for execution; and

(*b*) if so, the stage at which the matter stands at present?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி :

(அ) திருக்கோயிலூருக்குக் குடிநீர் வழங்குவதற்கான திட்டத்திற்கு ரூ. 11.45 இலட்சமும் அதைப் பேணுதலுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 54,000 செலவு ஆகும் திட்டம் ஒன்றுக்கு இந்த அரசு நிர்வாக ஒப்பளிப்பும் வழங்கியுள்ளது.

(இ) 1969 ஜனவரியில் பணி தொடங்கப்பட்டு பல்வேறு நிலைகளில் நடந்தேறி வருகிறது.

திரு. என். டென்னிஸ் : உத்தேசமாக இது எப்போது முடிவடையும், எவ்வளவு மக்கள் இதன் பயனை அடைவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : இது 1971 ஆகஸ்ட் மாதத்திலிருந்து பல்வேறு கட்டங்களாகச் செயல்பட்டு நான்காவது நிலையில் செயல்பட்டுவருகிறது. விரைவில் முடிவு அடையக் கூடும்.